**மார்ச் - 14**

**"பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் (கோபத்துக்குத் தாமதிக்கிறவன்) உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்". - நீதி 16 : 32**

பகை, பொல்லாப்பு, சண்டை, பொறாமை போன்றவைகளிலுள்ள கோபம், தேவனுடைய பிரிய குமாரனுடைய பிரதிரூபங்களாவதற்கு நாடுகின்ற யாவராலும் விலக்கப்பட வேண்டியதாயிருக்க, தவறான செய்கைகளுக்கு விரோதமாகவும், பற்பல விதங்களில் தோன்றுகின்ற பாவங்களுக்கு விரோதமாகவும் காட்டப்படுகிற கோபம், நீதியான கோபம் என்ற அர்த்தத்தில் முறையானது. அன்பின் துணைகொண்டு, இது மிகவும் மட்டாக பிரயோகிக்கப்பட்டாலும் சில சந்தர்ப்பங்களுண்டு. அப்போது நீதியான கோபத்தை உபயோகிக்காமலிருப்பது தவறானதாகும். **-Z '96, 279 (R 2068).**

ஏன் கோபத்திற்குத் தாமதிக்கிறவர்கள் பலவானைப் பார்க்கிலும் உத்தமர்களாயிருக்கிறார்கள் என்பதற்குக் காரணம் என்னவென்றால், அன்பும், அனுதாபமும் மற்றவர்களுடைய பலவீனங்களுக்கு இரக்கங்காட்டத் தூண்டுகின்றன. அதைப் பலவான்கள் செய்ய மனதில்லாதிருக்கிறார்கள். ஏன் தன் மனதை அடக்குகிறவன் பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தவன் என்பதற்குக் காரணம் என்னவென்றால், சாத்தானையும், உலகத்தையும், மாம்சத்தையும் தனது இருதயத்திலுள்ள அவைகளின் கோட்டையிலிருந்து அகற்றப் பிரயாசப்படுவதற்கு, பட்டணத்தைப் பிடிக்கிறவனுக்கு வேண்டியிருக்கிறதைவிட, மிகவும் அதிகமான விடா முயற்சியும், யுத்தத்தந்திரமும், தைரியமும் வேண்டியிருக்கிறது. இந்த விதமான சுய ஆட்சிதான் உண்மையான வெற்றி. **- P '35, 31,32.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

நீதி 25:28; 1கொரி 13:4,7; 2கொரி 6:4-6; கலா 5:22,23; எபே 4:1,2,26,31,32; கொலோ 1:11; 3:12,13; 1தீமோ 1:16; 2தீமோ 3:10; 4:2; 1சாமு 10:27; 24:1-15; மத் 27:12-14; 1கொரி 9:25,27; தீத் 2:2.

**கோபுர வாசிப்பு : Z '15, 59 (R 5635).**

**வினாக்கள்:** இந்த வாரத்தில் நான் நீடிய பொறுமையும்,தன்னடக்கமும் உள்ளவனாயிருந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? அதில் உதவியாகவும் பிரதிகூலமாகவும் இருந்தவை எவை? அதன் பலன் என்ன?